நிர்வாக அலுவலர், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு நதிநீர் இணைப்புத் திட்டம், திருநெல்வேலி மற்றும் உதவி ஆட்சியர், திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை : திரு.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப.,

ந.க.அ1/5749/2019

நாள்: .09.2020

பொருள்: நிலஎடுப்பு- -திருநெல்வேலி மாவட்டம் - பாளையங்கோட்டை வட்டம் - தருவை கிராமம் புல எண்கள் 718/3B,4A1,4B ல் 1.05.58 ஹெக்டேர் புன்செய் நிலம் தாமிரபரணி ஆற்றில் உபரி வெள்ள நீரை கொண்டு செல்லும் - தாமிரபரணி கருமேனி ஆறு - நம்பி ஆறு நதிகள் இணைப்பு திட்ட நிலஆர்ஜித பணிக்கு நிலம் கையகப்படுத்துதல், RFCTLARR Rules -2017ன் கீழ் மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்த்தல் - திட்டவரைவு அறிக்கை வெளியிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.ஜே3/10315/2016 நாள்: 12.02.2019
2. பாளையங்கோட்டை வட்டாட்சியரின் கடிதம் ந.க.எண்.ஆ1/5095/2019 நாள்: 04.03.2020
3. மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கைகள் நாள்:20.12.2019

உத்தரவு:

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் தருவை கிராமம் புலஎண்கள்: 718/3B, 718/4A1,718/4B ஆகியவற்றில் 1.05.58 ஹெக்டேர் புன்செய் நிலத்தில் தாமிரபரணி ஆற்றின் உபரி வெள்ள நீரை கொண்டு செல்லும் தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு நதிகள் இணைப்பு திட்டத்தினை மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசனப்பயன் திட்டத்தின் கீழ், நில ஆர்ஜித பணிகள் செய்யப்படவுள்ளதால், 2013-ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு, ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு சட்டப் பிரிவு 11(1) மற்றும் 2017 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை விதி.13(1)-ன்கீழ் முதல் நிலை அறிவிக்கை பார்வை 2-ல் காணும் அரசாணை (நிலை) எண்.201,பொதுப்பணி(ப்பி-2)த்துறை நாள்: 18.11.2019ன்படி வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை(1)ல் காணும் செயல்முறை உத்திரவின்படி, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு நிர்வாக அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ள திருநெல்வேலி, சார் ஆட்சியர் அவர்களால், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், தருவை கிராமத்தில் நில எடுப்பிற்காக முதல்நிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ள நிலங்கள்/பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள்/பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மதிப்பீடு செய்தல் ஆகியவை குறித்து பாளையங்கோட்டை வட்டாட்சியர் மற்றும் சார்நிலை அலுவலர்களுடன் 16.12.2019 அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், மறுவாழ்வு மற்றும் மீள்குடியமர்த்துதல் தொடர்பாக, சம்பந்தப்பட்ட நில உரிமைதாரர்களிடம் கருத்து கேட்பு கூட்டம் 20.12.2019 அன்று நடத்தப்பட்டது.

இந்நில எடுப்பிற்கான, முதல்நிலை அறிவிக்கையின்படி, கவரப்படும் நிலங்களில் இடமாற்றம் செய்யப்படும் குடும்பங்கள் (PDF) எதுவும் இல்லை. இந்நில எடுப்பில் கவரப்படும் புல எண்களில், மொத்தம் ஐந்து பட்டாதாரர்கள் உள்ளனர். அவற்றில் ஒரு பட்டாதாரர் காலமாகிவிட்டதால், அவரது வாரிசுகளில் இரண்டு வாரிசுதாரர்கள் மற்றும் இதர பட்டாதார்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் ஆஜரானார்கள். ஒரு வாரிசுதாரர் ஆஜராகவில்லை. மொத்தம் மூன்று பட்டாதாரர்கள் மட்டும் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் ஆஜரானார்கள். கருத்துக்கேட்புக் கூட்டத்தில் ஆஜரான பட்டாதாரர்கள் இந்நில எடுப்பு சம்பந்தமாக, எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. கருத்துக்கேட்புக் கூட்டத்தில் ஆஜரான பட்டாதாரர்கள் தங்களுக்கு வீடு / வேறு நிலங்கள் உள்ளதால் கையகப்படுத்தப்படும் நிலங்களுக்கு பதிலாக வேறு நிலம் தேவையில்லை என்று தெரிவித்துள்ளனர். எனவே, இந்நில எடுப்பினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் (PAF) எதுவுமில்லை.

இந்நில எடுப்பில், கவரப்படும் நிலங்கள் 20.12.2010 அன்றே கேட்புத் துறையினரால், சம்மதக் கடிதம் பெறப்பட்டு, முன்நுழைவு செய்யப்பட்டு கால்வாய் தோண்டப்பட்ட போது, குடும்பங்கள் எதுவும் இடமாற்றம் (PDF) செய்யப்படவில்லை. இந்நில எடுப்பில் சம்பந்தப்பட்ட நில உரிமைதாரர்களின் மொத்த விஸ்தீரணத்தில், பகுதி விஸ்தீரணம் மட்டுமே கையகப்படுத்தப்படுகிறது. இதனால், நில உரிமைதாரர்களின் வாழ்வாதாரம் எதுவும் பாதிக்கப்படவில்லை. மேலும், நில உரிமைதாரர்கள் சுய தொழில் புரிபவர்களாகவும், வருமான வரி செலுத்துபவர்களாகவும் உள்ளதால், இந்நில எடுப்பினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் (PAF) எதுவுமில்லை. எனவே, நில உரிமைதாரர்களுக்கு மறுவாழ்வு மற்றும் மீள்குடியமர்விற்கான உரிமைக் கூறுகள் எதும் வழங்க தேவையில்லை என தீர்மானித்து உத்திரவிடப்படுகிறது.

**இணைப்பு:**

மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்ட வரைவு அறிக்கை

மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு அலுவலர்<br>மற்றும் உதவி ஆட்சியர்<br>திருநெல்வேலி.

பெறுநர்<br>மாவட்ட ஆட்சித்தலைவர்,<br>திருநெல்வேலி.

நகல்:

1. நில நிர்வாக ஆணையர் மற்றும் கூடுதல் தலைமை செயலாளர், சென்னை
2. மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுத் திட்ட ஆணையர், சென்னை